23.03.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 173 /2022 ) திரு.முருகன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் குடியிருக்கும் வீடு எந்த வருடம் வாங்கினேன் என்றால் 10,12 ஆண்டுகள் இருக்கும் தேதி ஞாபகமில்லை. நான் வீட்டை விலைக்கு வாங்கிய பின்னர் தான் வீடு எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அந்த இடத்தில் வீடோ, மனையோ இல்லை என்றால் எனது அப்பா டீக்கடை போட்டியிருந்தார். எனது அப்பா டீக்கடை போட்டுள்ள விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பக்கத்தில் நான் வீடு வாங்குவதற்கு முன்பே வாதி பல வருடங்களுக்கு முன்பே குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வடபுறம் வேல்முருகன் என்பவர் தற்போது செட் போட்டு குடியிருந்து வருகிறார் என்றால் செட் போட்டுள்ளார். வேல்முருகன் செட் போட்டுள்ளதற்கு மேற்கு உள்ள நிலம் தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தினைப்பார்த்து தான் வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீட்டின் முன் வாசல் வழக்கு சொத்தை பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான். வாதி அவரது குடும்பத்தார்கள் அனைவரும் வழக்கு சொத்தில் தான் வாகனங்கள் வைத்திருப்பது செடி,கொடிகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான் பிரச்சனை செய்வதற்காக வைத்துள்ளார்கள். எனது வீட்டிலிருந்து வழக்கு சொத்திற்கு போக வேண்டுமென்றால் வேல்முருகன் செட், பிள்ளையார் கோவில் முன்பாக மினிபஸ் போருந்து நிறுத்தம் வழியாக கிழவிபட்டி - கெச்சிலாபுரம் சாலை வழியாக 200 மீட்டர் சென்று தான் போகமுடியும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழக்குபக்கம் தென்வடல் ரோடு செல்கிறது என்றால் சரிதான். எனது வீட்டை சுற்றி 3 பக்கமும் வேறு நபர்கள் அனுபவத்தில் இருப்பதால் நான் சைடுவழியாகவும் வேறு வழியாக நான் போக முடியாது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான்தான் அனுபவம் செய்துவருவதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் வழக்கு சொத்தில் எனது அப்பாவுக்கு முழு உரிமையுள்ள ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தாத்தாவிடமிருந்து எனது அப்பா கிரையம் பெற்று எனக்கு எனது அப்பா எனக்கு கிரையம் கொடுத்த சொத்து. எனது தாத்தாவிடமிருந்து எனது அப்பா கிரையம் பெற்ற

ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 2 வது வரை படித்துள்ளேன். நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தவறு எனது வழக்கறிஞர் படித்துக்காண்பித்தார். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போதுஎவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வாதி மொட்டையசாமிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வில்லங்கம் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்குசெல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி என்ன நான்கு மால்கள் விவரம் கண்டு தாவாச்சொத்தை காண்பித்து ஆவணம் தாக்கல் செய்துள்ள விவரம்தெரியாததால் தான் தவறான நான்குமால் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி எவ்வளவு இடத்திற்குவழக்குதாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்றால் 1 ½ செண்டுக்கு வழக்கு போட்டுள்ளார். 2 வது தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டதென்று கூறி நான் வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு எந்தவித பாத்தியதையும் இல்லாததால் நான் வேறு வழக்குஎதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தபசில் சொத்தின் முழு உரிமையும் வாதிக்குப் பாத்தியப்பட்டதென்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தை இடையூறு செய்வதற்கு எனக்குஎந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையும், நிருபண வாக்குமூலம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் கட்சிசெய்ய எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.03.2025.